# முரசொலி

2 அணா

ஆசிரியர்: மு. கருணாநிதி

...ர் 1 | சென்னை | 23 — 7 — 54 | வெள்ளி | ஒலி 17


# வருமுன் காக்கும் - வடபாதிமங்கலத்தார்

...ஞ்சை மாவட்டம் காம்பு ... நிலத்தைக் காணாத பகுதி. ...மனெடுத்த கூட்டைப் போல ...ப்பு கட்டிய கழனிகள்-அதை ...ாய்ந்து செல்லும் வாய்க் ...ல்கள்—எந்த மாவட்டத்திலும் ...ணமுடியாத காட்சி இது. ...ச்சைப் பாய் விரித்திருக்கும் ...பல் வளமா? பாசி படர்ந்த ...ருக்குளமா? எதற்கும் பஞ்ச ...ன்றி செல்வம் கொழிக்கும் ...மி அது. நெல் அரைக்கும் ...ிய மில்களைத் தவிர தஞ்சைத் ...ரணியில் பெரிய அளவிலே ...மைந்த தொழிற்சாலைகள ...டையாது.

...கார்மேகத்திரள் அல்லாது ...லையின் கரும்புகை இதுவரை ...ஞ்சையைத் தீண்டியது கிடை ...து. அந்த செங்நெற் ...ால்லையில் தான் இப்போது ...ு கன்னல் தோட்டம் உண்டு ...ண்ணப் போகிறார்களாம். ...தைச் சார்ந்து மிகப் பெரிய ...ளவில் ஒரு சர்க்கரை ஆலை ...ன்றையும் நிர்மாணிக்கப் ...பாகிறார்களாம்.

...தஞ்சை மாவட்டத்தின் பெரு ...லக்கிழாரும் — பஞ்சைகளாய் ...ாரிகளாய் பல்லாயிரக் கணக் ...ானவர் வீதிகளிலே திரிய, ...மீபத்தில் வைர அஸ்தம் பூண்டி ...க்கும் திருப்பதி வெங்கடா ...லபதி கோவிலின் டிரஸ்டியாக ...ருக்க வாய்ப்பு பெற்றவருமான ...ி. எஸ். தியாகராச முதலியார் ...ான் இந்த ஆலையின் அதிபராம்.

...இதற்காக அவர் தனக்குச் ...சாந்தமான 5000 ஏக்கர் ...லத்தை கரும்பு சாகுபடிக்கு ...யன் படுத்தப் போகிறாராம். ...கோடி ரூபாய் மூலதனம் ...காண்ட இந்த ஆலைக்கு மத்திய ...ர்க்கார் 50 லட்ச ரூபாய் நிதி ...தவி செய்யப் போகிறதாம்.

...கழனிகளைக் கட்டியாண்ட ...பதி, ஆலைக்கு அதிபதியாகி ...ர். தித்திப்பான செய்திதான், ...மக்கு! வெள்ளிக் காசுகள் நிரம்பிய மூட்டைகளை ஆண்டுக்கொரு முறை அவிழ்த்து புளி போட்டு 'பாலிஷ்' செய்து திரும்பவும் சாக்குப் பைக்குள் திணிக்கும் சீமான்கள் நிறைந்த மாவட்டத்தில் துணிந்து ஒருவர் தொழில் துறையில் இறங்குவது வரவேற்கத்தக்க செய்திதான். ஐம்பது ராத்தல் நிறையுள்ள தியாகராஜசாமியின் விக்ரகத்தை ஐநூறு டன் நிறையுள்ள தேரில் ஏற்றி—அதை, உச்சி வெயிலுக்கும், உடலை உரித்து எடுக்கும் கசையடிக்கும் கலங்காது ஐம்பதாயிரம் பாட்டாளித் தோழர்கள் இழுக்க—இந்ததிடுக்கிடும் கோரக் காட்சியை தேக காந்தி குலையாமல்—திருநீற்றுப் பட்டை அழியாமல்மேற்பார்வை இட்ட எம். ஏ. பட்டதாரி, இனி மேல் அறிவியலின் அறுவடையாம் இயந்திரத்தையும் அதை முடுக்கிவிடும் விஞ்ஞானச் சின்னத்தையும் மேற் பார்வையிடுவார். ஆச்சரியமான செய்திதான்! தேவஸ்தானத்துக்கு தேவஸ்தானம் தர்மகர்த்த ராயிருந்தவர் இப்போது ஒரு பெரிய தொழிற்சாலைக்கு டைரக்டராக மாறப் போகிறார். உண்மையிலேயே இந்த மாற்றம் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. இப்படி இருந்தும் நம்மால் வி. எஸ். டி. யின் இந்த முயற்சியை வரவேற்கமுடியவில்லை. திரு. தியாகராசர் இந்த கரும்பாலையை வழியெல்லாம் கருப்பங் கழிகளாகி நீரெல்லாம் கருப்பஞ் சாராய் தித்திக்கும் வடஆற்காடு மாவட்டத்திலோ அல்லது வேறு எந்தப் பிரதேசத்திலோ துவக்கியிருந்தால் நாம் கவலைப் பட்டிருக்க மாட்டோம்.

ஆனால் தியாகராசர் சென்னை மாநிலத்தின் ... ...ம் தஞ்சையிலே சர்க்கரை ஆலையைத் துவங்குவதுதான் நம் துயரத்தைக் கிளப்புகிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்—சுயதேவையைப் பூர்த்தி செய்யுங்கள் — என்றபடியெல்லாம் ஊர் முழுதும் உபதேசம் செய்கிறார்கள் ஆட்சியாளர்கள். உற்பத்தி செய்; இல்லையேல் செத்துமடி என்று சிந்து பாடுகிறார் மோதிலால் மைந்தர். இந்த நிலையில்தான் நாம் கேள்விப் படுகிறோம், நெல் உற்பத்தி செய்யும் 5—ஆயிரம் ஏகரா நிலத்தை, கரும்பு உற்பத்திக்கு ஒதுக்கும் உதவாக்கரை திட்டத்தை! நினைக்கவே நெஞ்சு கூசுகிறது. தஞ்சையின் நான்கு தாலுகாக்களிலே ஏக்கர் ஒன்றுக்கு அதிகமாக இரண்டு மூட்டை நெல்லை எப்படி உற்பத்தி செய்யலாம் என்று எருப் பொருள்களை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது, சென்னை அரசாங்கம். அதே அரசினர்தான் காவிரியின் தென்பாங்கில் வடபாதிமங்கலத்தில் 5-ஆயிரம் ஏக்கராக்களை கரும்பு சாகுபடிக்கு ஒதுக்குகிறார்கள். முறண்பட்ட கொள்கை! திறனற்ற செய்கை!

வடபாதிமங்கலம்தியாகராசமுதலியார்ஒரு பெயர்பெற்றசந்தர்ப்பவாதி; வருமுன் காக்கும் வாலிபர்! ஆகஸ்ட் பதினைந்திற்கு, சில நாட்கள் முன்னதாக வெள்ளையன் தந்த ராவ்பகதூர் பட்டத்தைத் துறந்து, மூவர்ணக் கொடிக்கு ஜே போட்டு பின்னர் தேசியக் கூடாரத்துக்குள்ளே முக்கியஸ்தராகிவிட்டவர்! இந்த சிற்றுளிதான் சென்னை அரசின் உணவுப் பிரச்சினையென்னும் மலையை உடைக்கும் மாபாதக வேலையைச் செய்கிறது. "சுதந்திரா" இதழ் சொன்னது போல வி. எஸ். டி. ஒரு ஆலையை நிறுவுவதன் மூலம் எஸ்டேட் டேட்டியின் இரும்புப் பிடியிலிருந்து தப்பிவிட்டார்.

காமராசர் கண்களுக்கு திரை போட்டு — தஞ்சை மாவட்ட விவசாயித் தோழர்கள்... ...களுக்கு களிம்பு பூசி, ... உற்பத்தியில் இறங்கப் போ... வி. எஸ். டி. தியாகராசர் வீசி எறிந்த பணஸ்திரத்துக்கு முன்னே அரசினரின் தேசிய விஸ்தரண திட்டம் நிர்மூலமாகி விட்டது. முதலாளிகளின் மிதியடிகளுக்கு மெருகு போடும் காங்கிரஸ் ஆட்சி வி. எஸ். டி. யின் கொலைபாதகத் திட்டத்துக்கு அடிபணிந்துவிட்டது. தஞ்சை தானே இந்த மாநிலத்து உணவுக் களஞ்சியம்; அதில் பெரும் பகுதியில் கரும்பு பயிரிட்டால் இந்த மாநிலத்து உணவு நிலைமை என்னவது என்பதை சற்றேனும் சிந்திக்காமல் டில்லி மூலவர்கள் அனுமதி அளிக்கப்போகின்றனர். வி.எஸ். டி. முதல் தேடும் வேலையைத் துவக்கிவிட்டா தியாகராச முதலியாரின் பாதையிலே வலிவலம் தேசிகரும். தேசிகர் சென்ற திக்கில் நாளை பூண்டி வாண்டையாரும்—வாண்டையாரின் வாடைபட்டு பின்னர் குன்னியூர் அய்யரும் கரும்பு பயிரிட்டால் உணவுக்குசென்னைமாகாணம் எங்கே போய்பிச்சை கேட்பது?—பொதுமக்கள்மத்தியிலேபொங்கி எழும் இந்தக்கேள்விகள்வி.எஸ்.டி.யின் காதுகளிலே விழாது. காமராசரும் இதைக் கவனிக்காத தூரத்திலேதான் விலகி நிற்கிறார்.

இந்த மாநிலத்து மக்கள் வாயிலே மண்ணைப் போட்டு—தான்மட்டும் பொன்னைத் தோண்டும் வேலையிலே பூரித்து நிற்கும் தியாகராசர் பொதுமக்கள்எதிரியாகக்காட்சியளிக்கிறார். இந்த நாசகாலக் கொள்கைக்கு வரவேற்பளிக்கும் அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்தின் பரம வைரியாகத்தான் இருக்க வேண்டும்.

நிலத்தின் மதிப்பு வெகுவாகக் குறைந்து வரும் இந்தக் காலத்தில் ஒரேயடியாக 5—ஆயிரம் ஏக்கராக்களை உதறிவிட்ட தியாகராசர் கரும்பாலையை மட்டும் துவக்கவில்லை. ஒரு குறைந்த

[ 8–ம் பக்கம் ]




[ எம். கே. ]

தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாகர்கோயில் போகிறபாதையில் நாங்குனேரிக்குப் பக்கத்தில் நாங்கள் கண்ட இரண்டு காட்சிகள் என்ன என்பதை சொல்லாமலே உங்கள் ஆவலே அதிகமாக்கி விட்டேன் அல்லவா? அந்தக் காட்சிகள் என்ன என்று இப்போது சொல்கிறேன்.

தி. மு. கழகம் தற்கால சென்னை அரசைப் பற்றி என்ன கருதுகிறது—ஏன் திராவிடநாடு கோருகிறது என்பதற்கு முதல் காட்சி உதாரணமாகவும், தி. மு. கழகத்தின் — ஆரிய திராவிட கொள்கைக்கு அரியதோர் விளக்கம்—இரண்டாவது காட்சியாகவும் அமைந்திருந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறேன்—பீடிகை பலமாயிருப்பதைப் பார்த்ததும் ஏதோ பிரமாதமான காட்சி வர்ணனை ஆரம்பமாகப் போகிறது என்று தானே எண்ணுகிறீர்கள்! முதல்காட்சி—வர்ணிக்கிறேன் கவனியுங்கள்!

பழுதடைந்து போன ஒரு லாரி சங்கிலியால் பிணைக்கப்பட்டு இன்னொரு லாரியால் இழுத்துச் செல்லப்பட்ட காட்சி தான் அது! சாதாரணமான காட்சி — சகஜமாகக் காணக்கூடியது! முன்னல் போகும் லாரியில் டிரைவர் இருக்கிறர். பின்னல் கட்டப்பட்டு ஓடுவதற்கு சக்தியற்றுப் போன அந்த லாரியிலும் ஒரு டிரைவர் இருக்கிறர். முன்னல் போகும் லாரி இழுத்த இழுப்புக்கு பின்னல் உள்ளலாரி போய்த்தீர வேண்டும் என்றலும்கூட, அந்தப் பழுதான லாரியிலும் ஒரு டிரைவர் அமர்ந்து கொண்டு, திருப்பும் விசையை சரியானபடி இயக்க வேண்டியிருக்கிறது.

ஆமாம்—சென்னை என்ற பழுதடைந்தலாரி, டில்லி என்ற லாரியில் கட்டப்பட்டு, அது இழுக்கும் பக்க மெல்லாம் போகவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறதென்றலும்—பழுதான லாரியிலும் அதைத்திருப்ப ஒரு டிரைவர் இருப்பதுபோல—சென்னை எனும் லாரியிலும் காமராசர் பிரதமராகவீற்றிருக்கிறர். பழுதான லாரியின் டிரைவருக்கும், சென்னையின் பிரதமருக்கும் என்ன வித்தியாசம் அதிகமாக இருக்க முடியும்— அதைப்பற்றி நாங்கள் பேசிக் கொண்டே போனேம் — சிறிது நேரத்திற்கெல்லாம் அடுத்த ஒரு காட்சியைக் கண்டோம் — சுமார் இருபது வண்டிகள் — மிகப்பெரிய வண்டிகள் — கொழுத்த காளைகள் பூட்டப்பட்ட வண்டிகள்—அந்த வண்டிகளிலே ஆண்களும் பெண்களுமாக ஆரிய இனத்தினர் அடைந்து கிடந்தனர். பளபளப்பான குடங்கள் — அண்டாக்கள் — தவலைகள்—சமையலுக்கான பாத்திரங்கள்—ஓரிரு வண்டிகளில் அடுக்கப்பட்டிருந்தன. ஏழையின் குடிசை வீடு அளவு உள்ள அந்த வண்டியின் கூண்டுகளுக்குள்ளே குதூகலத்தோடு அந்த சந்தனமேனியர் காட்சி தந்தனர்—அந்த வண்டிகளுக்குப் பின்னே கால் நடையாக கறுப்பு மனிதர்கள் சுமார் ஐம்பது பேர் ஓட்டமும் நடையுமாக வியர்வை கொட்டக் கொட்ட வந்து கொண்டிருந்தார்கள். போலீஸ்உடையணிந்த ஒருவர், கையில் துப்பாக்கி சகிதம் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்—அதன் பின்னே ஒரு அழகான பல்லக்கு.

அதை சிலர் சுமந்து வந்தனர். இருபுறமும் சாமரம் வீசிக் கொண்டு சிலர்! பல்லக்கிலே ஒரு பெருத்த சரீரம் படுத்திருந்தது. திடீரெனபல்லக்கு நின்றது. பல்லக்குதூக்கிகளுக்கு கழுத்துவலி எடுத்துவிட்டதாம்; களைத்துச் சோர்ந்து விட்டார்கள். உடனே வேறு நாலைந்து கறுப்பு மனிதர்கள், ஆம், திராவிடர்கள்பல்லக்கை தூக்கிக் கொண்டார்கள். அப்படி ஆள் மாற்றும்போது அசைவு ஏற்பட்டு, அனந்தசயனத்திலிருக்கும் அய்யனுக்கு தூக்கம் கலைந்துவிடக்கூடாதே; அதற்காக மிக மெதுவாக பல்லக்கு ஆள் மாற்றும் வேலை நடைபெற்றது! திருநாமமணிந்த அந்த திருமேனியார் பல்லக்கிலே! அவரது திருக்கூட்டம் வீடு போன்ற வண்டிகளிலே! மாடுகளும், கறுப்பு மனிதர்களும் அவர்களை சுமந்து செல்ல வேண்டுமாம்—அது விதியாம்!

அதுதான் ஆரிய தர்மமாம்! கால் கொப்பளிக்கும் கடும் வெயிலிலே—சாமரம் வீசச் சிலரும், “சாமீ வாழ்க” என முழங்கிடப் பலரும், பல்லக்கு சுமக்கப் பலரும் ஓட்டமும் நடையுமாக பின் தொடர, எதுபற்றியும் கவலையின்றி ஒய்யாரமாக ஆரியர் பவனி நடத்துவார்களாம்—அதை தடுத்துக்கேட்டால்துவேஷமாம்! துன்மார்க்கச் செயலாம்! யாரோ உழைத்த உழைப்பை அனுபவித்து உடம்பு வீங்கிப்போய் பல்லக்கில் உருண்டுகிடக்கும் பெரியஜீவனை — பாடைதூக்கிச் செல்வதுபோல திராவிடப் பாட்டாளிமக்கள் தூக்கிச் செல்லுகிறர்கள்—அதைப்பார்த்து கண்ணீர் வடித்தபடியே சென்றேம்—அந்த ஏழைத்தோழர்கள் இப்படி இருபது முப்பது மைல் போகவேண்டும்—அது மடத்தின் கட்டளை! அதைக் கடந்து அருகே உள்ள ஊரின்வழி சென்றேம். அந்த ஊர்ச்சுவர் எல்லாம் எழுதப் பட்டிருக்கிறது அரிவாள் சம்மட்டி ஓவியங்கள்! “பணமுதலை ஒழிக!” இதைத்தான்காண முடிந்ததே தவிர — அவ்வழியே செல்லும் அந்த மதத் திமிங்கிலத்தைப்பற்றி ஒரு கண்டனச் சொல்லையும் காண முடியவில்லை. பல்லக்கு தூக்குவதும் பாட்டாளி விம்முவதும் —பகவான் செயல் என காலட்சேபம் செய்ய புறப்பட்டிருக்கும் கம்பாராமாயணக் கம்யூனிஸ்டு கட்சிக்கு இந்தக் கவலை எப்படியிருக்க முடியும் — இந்த அடிப்படை உண்மைதான் எப்படிப் புரியமுடியும்!

நாஞ்சில் செல்லும் வழியில் கண்ட இந்த இருகாட்சிகளும் எங்களுக்கு இதயவேதனையைத் தந்தது – அதோடு நாகர்கோயில் எல்லையை தொட்டோம்!

நாகர்கோயில் பகுதிகளில் நமக்கு வளர்ந்திருக்கும் செல்வாக்கு—அப்பப்பா—அந்த ஆர்வத்தை நேரில்தான் காண வேண்டும். போகும் போதே தோவாளை என்னும் ஊர்த் தோழர்களும்—பொது மக்களும் காரை மறித்துக் கொண்டார்கள் கழகச் செயல் மனைக்கு அழைத்துச் சென்று உபசரித்தார்கள். அவர்கள் அன்புத்தளையிலிருந்து விடுபட்டு நாகர்கோயில் அடைந்தோம். சிரித்த முகத்துடன் வரவேற்று மகிழ்ந்தனர் தோழர்

[ 6–ம் பக்கம் ]

## புரிகிறதாம்!

திராவிட கழக இயக்கங்களில் எனக்கு ஓரளவு அனுதாபம்உண்டு. ‘பாகிஸ்தான்’ கோஷத்தைப் போன்று திராவிடஸ்தான் கோஷமும், ஒரு பிரிவினை சக்தி என்று நினைத்து அதை ஒடுக்க முயன்ருல், ‘திராவிடஸ்தான்’ கோரிக்கை பலமடையுமே தவிர, பலஹீனப்படாது.

‘பாகிஸ்தான்’ கோரிக்கையை ஜின்னு எழுப்பிய போது காங்கிரஸ் தலைவர்கள் அதை ஆத்திரத்துடன் குருட்டுத் தனமாக எதிர்த்தனர். இதனல் பாகிஸ்தான் கோரிக்கை வெற்றியடைந்ததே தவிர, காங்கிரஸ் தலைவர்கள் வெற்றி பெறவில்லை. இதே போலத்தான் ‘திராவிடஸ்தான்’ கோரிக்கையும்! திராவிட இயக்கத்தை அனுதாபத்துடன் பார்க்க வேண்டுமேயன்றி, ஆத்திரத்துடன் நோக்கக் கூடாது.


★

பார்ப்பனர்களின் ஆதிக்க மனப்பான்மையால் தான் எதிர்ப்பு இயக்கம் தமிழ்நாட்டில் பலமடைந்துள்ளது. பார்ப்பனர்கள் பார்ப்பனர் அல்லாதாரை பழங்காலத்தில் கொடுமையாகநடத்தியதால் தான் இன்று திராவிட இயக்கம் தமிழ் நாட்டில் வலுவடைந்துள்ளது.

★

தென் இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் உள்ள சோஷலிஸ்டுகள் ஜாதி முறைகளை ஒழித்துக் கட்டுவதில் முன்னின்று போராட வேண்டும். இது அவசர அவசியம். எவனுவது ஒரு சோஷலிஸ்ட் ஒரு பார்ப்பன நிர்வாகத்திடம் சென்று தஞ்சம் புகுந்தால் அவன் தன்னை சோஷலிஸ்ட் என்று சொல்லிக் கொள்ள அருகதையற்றவன்.

கட்சி ஊழியர் கூட்டத்தில்
–லோகியோ



நாஞ்சில் சுற்றுப் பயணத்தின் போது வடசேரி தி. மு. க. வில் எடுக்கப்பட்ட படம்

# தலையங்கம்

சென்னை [23—7—54] வெள்ளி

## இரு அவதாரங்கள்!

ராஜகோத்திரத்தின் கருவறுக்க நாண் ஏற்றி புறப்பட்டான் பரசுராமன். இரக்கமென்னும் ஒரு பொருளில்லா அரக்க வம்சத்தை துவம்சம் செய்ய காண்டீபம் ஏந்தி களம் புகுந்தான் ஸ்ரீராமன். இந்த இருவருமே விஷ்ணுவின் அவதாரங்களாம்—முரணான காரியங்களை பக்தி சிரத்தையோடு கூறும் புராணம்தான் இப்படி சொல்லுகிறது. ராஜ பரம்பரையை வாழ்விக்கும் ஜானகிராமன்—அதே பரம்பரையை அழிக்கும் பரசுராமன்—இரண்டுமே எம்பெருமானின் திரு அவதாரங்கள். நகைப்புக்கு இடமின்றி நம்மவர் நம்பும் புராணம் போதிக்கும் காட்சிகள் தான் இவை.

அதே அவதாரத்தின் உட்பொருளைத்தான் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும் தன்னுள்ளே ஜீவரகசியமாகக் கொண்டிருக்கிறது. பாடி வரும் புதுநிலவே—கோடி தருகிறேன்; என்னை நாடிவா.—என்று கவிதை மழை பொழிவார் ஒரு தலைவர். கேடிகளுக்குத் துணைபுரியும் கும்மிருட்டே—நீ தான் தேவை—என்று சங்கநாதம் செய்வார் மற்றொரு தலைவர். நேருவின் சர்வாதிகாரப் புயலைத் தடுத்து நிறுத்த மேருவைச் சிருட்டிப்போம்—என்ற உறுதி மொழியின்படி ஒரே கொடியின் கீழே ஒன்றுபட்ட பிரஜா சோஷலிஸ்ட் தலைவர்கள்தான் இந்த முறண்பட்ட முறைகளை திறம்படச்செய்து வருகின்றனர். அந்தக் கொள்கையற்றவர்கள் கூட்டத்தை—பாசிசத் தோளுந்தி—பதவிக் கோட்டைக்கு கால்கோள் நாட்டும் கள்ளத் தன்மையை ஜூலை 4 உலகுக்கு பறைசாற்றிவிட்டது. அந்த நாளில்தான் எந்த நாளும் இந்த உபகண்டத்தில் நித்திய நர்த்தனம் ஆடும் அடக்குமுறையும், வாய்ப்பூட்டு சட்டமும் 'இரு அரசியல் அவதாரங்களை' நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டது.

பட்டம் தாணுப்பிள்ளை—முன்னர் வெள்ளையரின் கொட்டத்தால் சிறைகோட்டம் புகுந்த விடுதலை வீரர்—அவர் தான் அந்த கொள்ளையர்கள் விட்டுச் சென்ற அடக்குமுறைக் கூத்தை தொடர்ந்து நடத்தும் "பரசுராம" அவதாரம் எடுத்து—ஜனநாயகப் பண்பாட்டை தரைமட்டமாக்க கலப்பைஆயுதத்தைகரத்திலேந்தினர். அன்றைக்கே தான் உத்தர பிரதேசத்தில்—வியர்வையிலே விளையும் வளமான கழனிகளுக்கு நீர்ப்பாசனத் தீர்வை போடும் அக்கிரமத்தை எதிர்த்து டாக்டர் லோகியோ அறப்போர்க் களத்திலே குதித்தார். குடியானவர்களின் குரல்வளையை நெறித்துவிட்ட மலைப்பாம்பாம், கால் வாய்த் தீர்வையை தடி கொண்டு தாக்க தாக்கீதுகள் பல விட்டு, ஆட்சியாளரின் மமதையை எதிர்த்த லோகியோதான் உரிமைக்குத் தடை போடும் கொடுமைக்காரர்களின் முதுகெலும்பை உடைத்தெறிய 'சீதாராம அவதாரம்' எடுத்திருக்கிறார். ஆமாம்! ஜூலை 4-ல் இந்திய அரசியலில் வாடிக்கையாகிவிட்ட பிரஜா சோஷலிஸ்ட்டுகளின் வேடிக்கை காட்சி உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது.

பரசுராமனும்—ஸ்ரீராமனும் மகாவிஷ்ணுவின் ஒரே அவதாரங்கள். அதே போலத்தான்—போர்க்கொடி ஏந்திய டாக்டர் லோகியோவும்—நாற்படையோடு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் மேல் தாவும் பட்டம் தாணுப் பிள்ளையும் ஒரே கட்சியின் இரண்டு அங்கங்கள்! இவர்களின் தலைவராம் கிருபளானி சொல்லுகிறார்—சத்தியாககிரகம் செய்வது இந்தியப் பிரஜை ஒவ்வொருவரின் பிறப்புரிமை என்று! காந்தியின் சீடர் கிருபளானி நினைக்கத் தவறிவிட்டார். நாஞ்சில் பகுதியிலே—சகோதரத் தமிழ்ப் பகுதியோடு இணைய வேண்டுமென்ற தணியாத வாஞ்சையோடு போர் புரியும் அந்தப் பெருங்குடி மக்களுக்கு அந்த உரிமை கிடையாதா? உத்தர பிரதேச முதல்வர் பண்டித வல்லப பந்த் செய்யக் கூடாத காரியத்தை பட்டம் தாணுப் பிள்ளை செய்யலாமா? ஆசார்யா கிருபளானி நேர்மையான அரசியல் கட்சி ஒன்றின் தலைவராக இருந்தால் இந்த விசித்திரமான "இரு அவதாரங்கள்" தலையெடுக்க விடலாமா? தவறிவிட்டார் கிருபளானி பாவம்; அவர் என்ன செய்வார்?

ஆளுக்கோர் கொள்கை—நாளுக்கோர் திட்டம் என்கிற முறையில் பிரஜா கட்சியின் இயந்திரம் சுற்றிக் கொண்டிருக்கிறது. தேனும், தினையும் உண்டு--பதவிக் கானமும், படாடோபப் பானமும் பருகிய "பழைய கதர்க் குல்லாய்கள்" நிறைந்துவிட்ட கட்சி அது! காங்கிரசின் பாசிசக் கூடாரத்திலேயிருந்து வெளியேறியவர்கள் புதுமனை புகுந்ததும் புரட்சிக்காரர்களாகத் திகழ்வார்கள் என்றுதான் பலரும் எதிர்பார்த்தனர். அவர்களோ மக்கிப் போன காங்கிரஸ் ஓலையின் இரண்டாவது பதிப்பாக இந்திய அரசியலை வட்டமிடுகிறார்கள்!

கிருபளானி தாணுப் பிள்ளையின் தவறுகளையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் மீது தூக்கி எறிந்து அதில் சிறிதளவு வெற்றியும் பெற்றிருக்கிறார். ஆனால் இதன் மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்திவிட்டார், காங்கிரசின் நிழல்தான் பிரஜாகட்சி என்கிற தத்துவத்தை! ஊழல்கள் மலிந்தது காங்கிரஸ் கட்சி-அதன் நெஞ்சு இணைந்த நண்பனாக—நீங்காத நிழலாக நின்று பணியாற்றுகிறது பிரஜா. கட்சி அதன் முதல்வர்தான் மொழிகிறார்—"நாஞ்சில் பிரிந்தால் திரு–கொச்சியின் பொருளாதாரமே நிலைகுலைந்துவிடும்"—என்று !

நாஞ்சில் பகுதி தமிழருக்கு சொந்தமல்ல என்று சொல்லியிருக்கட்டும், தாணுப்பிள்ளை—நாம் அவருக்கு புள்ளி விபரங்களை அள்ளிக் கொட்டி—வரலாற்று உண்மைகளை எடுத்து நீட்டி நம் பாத்தியதையைக் காட்டியிருப்போம்! அஃதன்றி தாணுப்பிள்ளையோ தகாதன பேசுகிறார். திரு-கொச்சி வாழமுடியாதாம்—அதற்காக நாஞ்சிலைப் பிரிக்க முடியாதாம்—விந்தையுரை ஆற்றுகிறார், வீரர்கள் மனம் புண்படும் வண்ணம்! மொழிவழி பிரிந்து–இனவழி கூடி-வடவரின் சுரண்டலைச் சாடி-விடுதலைப் பண் பாடிட திராவிடத்து மக்களை திரட்டிவரும் தி. மு. கழகம் நாஞ்சில் சென்னையோடு சேருவதை, தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன்னர் வரப்பு அமைத்துக் கொள்ளும் வேலையாக நினைக்கிறது. அதற்குள், நமக்கும்--மலையாள மாந்தருக்கும் இடையேயுள்ள தொடர்புக்கு கலாம் விளைவிக்க நினைக்கின்றனர். காங்கிரசின் பங்காளியாம் பிரஜா-கட்சியினர். இந்த குறும்புக்கு மறுப்பளிக்கும் வேலை தி. மு. கவைச் சேர்ந்ததாகும். தமிழன்னையின் கழுத்திலே பொன்னரி மாலையாக இருந்து பட்டொளி பரப்பி, பாங்கொடுதிகழ நினைக்கும் நாஞ்சிலின் உரிமைக் கிளர்ச்சிக்கு தி. மு. கவின்ஆதரவுஎன்றும்உண்டு. நண்டின் வரவுபார்த்துகடற்கரையோரம் நிற்கும் நரிகளைப்போல கேரளத்தாருக்கும் — தமிழகத்தாருக்கும் தகராறு கிளப்ப நினைக்கும் தறுதலைகள், நம் சகோதரத் தொடர்பு கண்டு நாணித் தலைகுனிய வேண்டும்.

நாஞ்சில் தமிழருக்கே!
மலையாளம் மலையாளிகளுக்கே!
திராவிடநாடு திராவிடருக்கே!

## பெருமூச்சு!

★

*[ பிறர் கற்பனையை திருடிவாழும் பித்தர்களை மனதில் எண்ணிக்கொண்டு பேராசிரியர் வரதராசனார் தீட்டிய "கரித்துண்டு" கதையில் ஒரு பகுதி-கீழேதரப்படுகிறது]*

"அந்தப் படம் முதலில் நீங்கள் எழுதியதா?"

"ஆமாம்."

"முதலில் எழுதியது எங்கே?"

"கை தவறிப் போய்விட்டது"

"இதிலே எல்லாம் உரிமை--'காப்பிரைட்' என்பது--இல்லையோ?"

"எங்கே இருக்கிறது. பாடுபடாத வியாபாரிகளின் உலகத்தில் அந்தச் சட்டம் மிகக் கடுமையாக இருக்கிறது. ஆனால் உடலைக் கெடுத்து உயிரைக் கொடுத்து உழைக்கின்ற கலைஞர்களின் உலகத்தில் அந்தச் சட்டம் செல்லரித்த சட்டம் போல் இருக்கிறது. என்ன செய்வது? யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் கொஞ்சம் கூட்டியும் குறைத்தும் எழுதித் தம்முடையது என்று சொல்லிக் கொள்ளலாம். அருவி ஓரத்தில் ஆறு புறா பார்த்துக் கொண்டிருப்பதாக நான் அழகாகக் கற்பனை செய்து எழுதியிருந்தேன். அதில் யாரோ மாறுதல் செய்து நான்கு காக்கை உட்கார்ந்திருப்பதாகஎழுதித் தம்முடையதாகச்செய்து கொண்டார்கள். கருநிற மலைக்கு மேலே இருண்டுவரும் செவ்வானத்தின் இடையிலே ஒரு கருமுகிலின் வாயிலே அந்திப் பிறை பாதி தெரிவதாக எழுதியிருந்தேன். அதை யாரோ கருநிற மேகங்களுக்கு இடையே முழுதும் தெரியும் மூன்றாம் பிறையாக மாற்றி விட்டார்கள். நன்றாகத்தான் இருக்கிறது. இருண்ட வானத்தில் நள்ளிரவில் பெய்யும் மழைத்துளிகள் மின்னலின் ஒளியால் விளங்குமாறு தீட்டியிருந்தேன். யாரோ ஒருவர் அதையும் ஒரு சிறிது மாற்றியிருக்கிறார். போகட்டும். அதனால் என்ன? எப்படியாவது அழகு கலைவடிவாக உலகத்தில் பரவினால் போதும்" என்றார்.

அவருடைய உள்ளத்தில் தம் உழைப்பு மதிப்புப் பெறாமல் திருடு போனதைப் பற்றிய குமுறல் எழுவதையும், தன்னலமற்ற துறவுள்ளம் அந்தக் குமுறலை உடனுக்குடன் தணிப்பதையும் கண்டேன். பெருமூச்சுடன் எழுந்தேன்.

— டாக்டர் மு. வரதராசன்

# வைதீக நெஞ்சில் வைர ஊசி!

"நல்ல குடும்பம் — ஒற்றுமையான குடும்பம். மகனுக்கு ஆலையிலே வேலை. மகளோ அரசாங்கப்பணிமனையிலே குமாஸ்தா. தம்பி இருக்கிறான்; அவன் தங்கக்கம்பி—மின் இயக்கத் தொழிலில் நிபுணன். நல்ல வருமானம் எங்கள் குடும்பத்திற்கு. யுத்த காலத்திற்கு முன்புநாங்கள் வாழ்ந்த நிலையைக் காட்டிலும் இன்றையநிலை எவ்வளவோ உயர்ந்ததுதான். என்றாலும் எங்கள் குடும்பத்தைப் பொருத்தவரை ஒருகுறை — பெருங்குறை இருந்து வருகிறது! ஆமாம், என் பிள்ளைகளிடையே சிந்தனை வளரவில்லை. ஏதோ, காலையில் எழுந்தவுடன் கைகால்முகம் கழுவி காரியலாயம் செல்லுகிறார்களே தவிர 'நாம்யார்?. நமது வாழ்க்கையின் தரமென்ன? நமது வியர்வை பள் பளப்பைக் கொடுப்பது யாருக்கு?', என்ற சிந்தனை, எனது செல்வர்களின் உள்ளத்தில் எழுந்ததாகத் தெரியவில்லை. எவ்வளவுதான் நாங்கள் வளமாக வாழ்ந்தாலும் சிந்தனைசக்தி வளரவில்லை என்கின்றபோது அதை ஒரு குறைவற்ற குடும்பம் என்றோ சுயேச்சை பெற்ற குடும்பம் என்றோ சொல்வதற்கில்லை"

இவ்வாறு ஒரு குடும்பத்தின் தலைவன்—மேலாளன்- பொறுப்பாளன்—போஷகன் — சொன்னால் அவனைப் பற்றி என்ன நினைப்பார்கள்? செல்வாதார சீர்திருத்தமே முக்கியமென பேசி செக்குமாடுகளைப் போல வட்டநிலத்திற்குள்ளே சுற்றிச் சுற்றி வருகிறவர்களோ, அல்லது, பகவான் ஆயுளைக்கொடுத்திருக்கிறார், பசி தீர்த்து காலத்தைக் கழித்தால் போதும், மானமாவது, மண்ணாங்கட்டியாவது என்று சொல்லி புறங்கூறிப் பொய்த் துயிர் வாழ்பவர்கள் வேண்டுமானால் மேலே கண்ட குடும்பத் தலைவனை 'பேராசைக்காரன்,' என்று சொல்லுவார்கள். ஆனால், உவமைக்கு கவரிமானை நினைவுக்கிழுத்து வரக்கூடியவர்கள் — உலகத்து ஜீவராசிகளில் மனிதனே சிறந்ததற்கு காரணம் 'மானமுண்டு அவனிடம்' என்று எண்ணுகிறவர்கள் — அந்தக் குடும்பத் தலைவனை-மானஸ்தனை-போற்றத் தவறார்-புகழ் பாடப் பின் வாங்கார்.

ஃ ஃ ஃ

அடினர்!—"மேற்கு ஜர்மனி மக்களின் தலைவர்—அந்நாட்டின் மூலவர் — மக்களால் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆக்க மன்றத்துக்குள் அனுமதிக்கப்பட்ட முதலமைச்சர்" என்று பலரால் புகழப்படுகிறவர். செல்முண்டு அங்கே-செய்து முடிக்க மூலப்பொருள் மிகவுமுண்டு. மேகத்தை மறைத்து, அந்த மண்ணுக்கு மண்டப மெழுப்பும் அளவுக்கு புகை கக்கும் ஆலைகள் ஏராளம். என்றாலும் அந்த மண்டலத்தின் தலைவன் கண்ணீர் வடித்திருக்கிறார் "ஐயோசிந்தனை வளரவில்லையே "என் நாட்டில்" என்பதாக.

"போரிலே நாம் தோல்வி கண்டாலும், வீரத்திலே சற்றேனும் குறைந்ததல்ல ஜர்மனி; துரோகிகள் ஜர்மனியைக் காட்டிக் கொடுத்திராவிட்டால் வெற்றி நமது தான் — ஆகவே இன்றைய வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது" என்று சுயமரியாதைக் குரலை ஜர்மனி எழுப்பிய அன்றே, ஜர்மனியின் வீரத்தையும் மானத்தையும் எல்லோரும் பாராட்டததான் செய்தார்கள். ஆனால் அன்றைய நிலையைக் காட்டிலும், இன்றைய நிலை உயர்ந்தது ஆனாலும் அதற்கேற்ற சிந்தனை வளரவில்லை என்றால் மானங்காப்பதிலே அவர்களுக்குள்ள அக்கறை எவ்வளவென்று நம்மால் அளவிட்டுக் கூற முடியவில்லை.

கோசார பலனுக்கே முதலிடம் தரும் ஆசாடபூபதியான தினமணி சிவராமன் அவர்களின் பேனாவிலிருந்து எப்படியோ இந்த உண்மை உதிர்ந்துவிட்டது. அவருடைய பாணியிலே ஜர்மனிக்கு 'யாத்திரை'யை மேற்கொண்ட சிவராமன் மேற்கு ஜர்மனியின் முதலமைச்சர் அடினரை கண்டு உரையாடினாராம். அப்போது அடினர் "எங்களுடைய உற்பத்திகள் முன்பைக் காட்டிலும் அதிகம் தான்—ஆனால் மக்களின் உள்ள நிலை உயரவில்லை" என்று சொல்லியிருக்கிறார். இந்தச் செய்தியை வெளியிட்டது கூட விந்தையல்ல; அடினர் இந்தக் கருத்தைக் கொட்டிய போது எதிரே இருந்த 'அய்யரின்' மெய்யறிவு எங்கெங்கே சுற்றியிருக்கும் என்பதை எண்ணும் போதுதான் நமக்கு வியப்பு ஏற்படுகிறது. அடினர் அதோடு நின்றுவிடவில்லை—இதோ இன்னும் பேசுகிறார் கேளுங்கள்; "தொழில் நுணுக்கத் துறையில் நாங்கள் வேகமாக முன்னேறுகிறோம்; ஆனால் சிந்தனை வளர்ச்சி அதிகமாக இல்லை. எல்லா தகராறுகளுக்கும் மூலகாரணம் அதுதான்"

நேரு அங்கே அந்தத்தொழிற்சாலையைத் திறந்து வைத்துவிட்டார்; கண்ணாடித் தொழிற்சாலை கட்ட அஸ்திவாரம் நாட்டிவிட்டார் என்பதையும், கங்கைக் கரையிலே, யமுனை ஓரத்திலே ஒரு லட்சம் பேர் சூரியகிரகணம் கண்டு களித்தனர் என்பதையும் படம் போட்டுக் காட்டும் சிவராமனாரின் சிரசிலே, அடினாரின் இந்த ரத்தினக் கருத்துக்கள் பலத்ததோர் சம்மட்டியடியைக் கொடுக்கத் தவறியிருக்காது.

நெஞ்சு துடித்திருக்கும், நெற்றியையும் சுழித்திருப்பார். "தொழில் வளம் பெருகினால் மட்டும் பயனில்லை; மக்களின் மனவளம் வளரவேண்டும்" என்கிறாரே என்றுகூட வாய்விட்டு முணங்கி இருப்பார் சிவராமன்.

அடினாரின் கருத்தை சிவராமன் புரிந்து கொண்டாரோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் அடினர் இறுதியாக தன் உள்ளக் கருத்தை—ஜர்மானியர்களின் ஜீவலட்சியத்தை வெளிப்படையாகக் காட்டிவிட்டார். "ஜர்மனி இன்னும் பூரண சுயேச்சை பெறவில்லை" என்று. இந்த ஒரு வாக்கியம் தினமணியாரின் இதயத்தில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியிருக்கும், "அப்பப்பா இந்த சுயமரியாதை வேட்கை எங்கேதான் ஜனித்ததோ தெரியவில்லை" என்று எண்ணமலா சிவராமன் அடினாரின் அறையை விட்டு வெளிவந்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்! ஒருக்காலும் இருக்காது! 'மானம் பெரிது' என்று எண்ணிப் பார்க்கும் புதுயுகம் இது என்றுதான் தீர்மானித்திருப்பார்—அந்த நேரத்தில் நம்மையும்—சுயமரியாதை இயக்கத்தையும் நினைக்காதிருக்க அவரால் முடியாது.

வைதீக உள்ளத்திற்கு வைர ஊசி பாய்ச்சிய, தொழில் துறை சீர்பட்டால் போதும் ஏனையவைகள் சீர்பட்டு விடும் என்றுரைக்கும் 'விசாலப் பார்வை' யினருக்கு விவேகமூட்ட முனைந்த அடினர் பாராட்டிற்குரியவர்.

★

## வெட்டிச் சாய்ப்போம்!

[ ந. மா. முத்துக்கூத்தன் ]

சீரோங்கும் திராவிடத்தைச் சுடுகாடாக்கிச்
சிறப்புடையச் செல்வமெலாம் சுரண்டிச் செல்லும்

கோரத்தைக் கண்டு இனி பொறுக்க மாட்டோம்!
குமுறும் மனம் எரிமலையாய் வெடிக்கக் காண்பீர்!

ஆராதரணமான திராவிடர்க்கு
அய்ந்தாண்டுத் திட்டத்தால் பலன் தானுண்டா?

ஊராளவந்தீரா? உறங்கும்சாவை
உசுப்பிவிட வந்தீரா? புரியவில்லை!

இறந்தோர்கள் மறந்தோராய் ஆகிவிட்டார்!
இருப்பினவர் எழுப்பும்நகை ஓயவில்லை!

இறந்தோரின் நகைதானென்றெண்ண வேண்டாம்!
இறுமாந்த அரசினரை அழித்ததுண்டு!

பிறந்தாலே மண்ணிலோர்நாள் இறக்கவேண்டும்;
பிறகென்ன நீரெழுப்பும் சாவுக்கஞ்சோம்!

சிறந்தோங்கும் திராவிடத்தைக்காண யெங்கள்
சிந்தைஅணு ஒவ்வொன்றும் திடமேகொள்ளும்!

பழிசுமத்திப் பாதாளச்சிறையில் தள்ளி
படைவரிசை கொண்டெம்மை அடித்துச் சுட்டு

வழிந்தோடும் ரத்தத்தில் நடந்துசென்று
வாழ்த்தொலிகள் கிளப்பிப்பின் மகிழ்ந்து நின்று

மொழிமாற்றம் செய்தாட்சி நடத்த யென்னின்
முடியாது! தமிழரினம் கோழையல்ல!

விழிபிடுங்கி உயிர்விம்மும் நரம்பறுத்து
விடுதலைக்குக் காணிக்கை தரவுமஞ்சோம்!

கங்கைவென்றோர் கடாரமதைக்கடிது வென்றோர்
கன்னித்தமிழ் திராவிடத்து மறவர் கூட்டம்!

பொங்கிவரும் படையழித்துப் புகழடையும்
போர்முறையின் வழியாவும் தெரியும்—மேலே

திங்களுண்டு, பரிதியுண்டு, கடலுமுண்டு
திராவிடரின் பெருமையெலா மவையறியும்!

இங்கினிமேல் கொடுமை விதை தூவ நேர்ந்தால்
இரக்கமிலா அக்கரத்தை "வெட்டிச்சாய்ப்போம்"

# மதமற்ற அரசில் :: :: மர்மயோகிகள்?

“சித்திப் பெண்ணே, நீ, எத்திக்கும் போற்றும் ரிஷி பத்தினியாகலாம், என்னிடமிருந்தால்! வா, கண்ணே, என் அருகில்வந்து உட்கார்!!”

“சுவாமி! தரணியை படைத்தவன் என்று சொன்னீரே, இப்படி யெல்லாம் தகாத முறையில் நடப்பது தகுமா தேவா!”

“பேதைப் பெண்ணே, அகிலானுபவம் உனக்கில்லை; கிருஷ்ணபரமாத்மாவைத் தெரியுமா உனக்கு? கோபியரின் கும்மாளத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிருயா? நீபச்சைக்குழந்தை பகவான்களின் ‘திருப்பணிகளை’ நீ எங்கே அறியப்போகிருய்? பெண்ணே, நான்தான் கிருஷ்ணபரமாத்மா! நீயார் தெரியுமா? -கோபிகாஸ்திரி! மாதரசி, ஆனல் ஒன்றைமட்டும் மறந்துவிடாதே! இந்தரகசியத்தை வெளியில் சொன்னல் உன்னையும் உன் உற்ருர் உறவினர்களேயும் பூண்டோடு அழித்துவிடுவேன்; நினைவிருக்கட்டும்”

இத்தகைய உரையாடல் பதினன்கு வயதுடைய சித்திப் பெண் ஒருத்திக்கும் போலி வேடதாரியான ஒருமர்மயோகிக்கும் மறைவிடத்தில் அடிக்கடி நிகழ்ந்து வந்திருக்கிறது. அந்த உரையாடல் இன்று மக்கள் மன்றம் ஏறிவிட்டது. டில்லி மாஜிஸ்திரேட் கோர்ட் சிரிக்கிறதாம் இவ்வழக்கு கண்டு. அது மட்டுமா?

கட்டாக்குக்கு அருகிலுள்ள கலியபோதாவில் சாதுக்களுக்கும், ராணுவத்தினருக்குமிடையே நடைபெற்ற கைகலப்பில் ரணகளமே ஏற்பட்டுவிட்டதாம். ராணுவத்தினர் பலர் படுகாயமடைந்திருக்கின்றனர். ஒரு போலிஸ் வீரர் கொல்லப்பட்டிருக்கிருர் — வெளிப்படையாக அவர்கள் வைத்துக்கொள்ளும் கமண்டலத்தால் தாக்கப்பட்டு அல்ல; மறைவிடத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த வேலால் தாக்கப்பட்டு, வாளால் கொய்யப்பட்டு! சாதுக்கள் கும்பலில் ஒரு சிலர் மேல் சந்தேகப்பட்டு அவர்களை கைது செய்யப்போன ராணுவ வீரர்களுக்கு இப்பேர்ப்பட்ட ‘வரவேற்பை’க் கொடுத்திருக்கிருர்கள், அந்த காவி உடை ‘அரிஹரதாஸ்’கள்.

இதைத்தான், சாதுக்கள் நேசம் பொல்லாது–சூதுக்காரப் பேர் வழிகள் அவர்கள் என்று நாம் சொன்னல் பண்டிதர் பைத்தியக்காரர்கள் என்கிருர். சுய நினைவோடு இருக்கும் அந்த சுந்தர மனிதரின் ஓரத்திலேதான் இந்த இரு நாடகங்களும் நடந்திருக்கின்றன.

பண்டிதரின் ஆட்சி இந்த நாடகங்களுக்கு மங்களம் பாடி முடிக்காவிட்டாலும் புதிய நாடகங்களையாவது அரங்கேற்ருதிருக்கலாம்.

சித்திப் பெண்ணின் வேதனைக் குரல் இன்னும் ஓயவில்லை; கட்டாக்கின் ரத்தமண் இன்னும் காயவில்லை. அதற்குள்ளாக ‘பம்பாயில் ஆசிரமப்பள்ளி’ என்ற இன்னெரு செய்தி–நம்நெஞ்சை வேக வைக்கும் செய்தி நம் கண்ணுக்குப்படுகிறது. பம்பாய் மாநிலத்தில் ஒதுக்கப்பட்ட பூர்வீகக் குடிகளுக்காக புது மாதிரியான ஆசிரமப்பள்ளிகளை தொடங்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம். இதற்காக 3 லட்ச ரூபாய் செலவு செய்ய சர்க்காரின் உத்தேசமாம். இதில் மூன்றில்இருமடங்குதொகையை மத்திய சர்க்கார் தருவதற்கு முன் வந்திருக்கிறதாம்! ஆஸ்ரமப்பள்ளி—அதற்கு பண உதவி அரசாங்கத்தின் தரப்பில்! மத சார்பில்லா சர்க்காரின் மாய்மாலம் இது என்று தானே சொல்லத் தூண்டுகிறது நம்மை!

அதுமட்டுமல்ல; அந்தப் பள்ளிகள் எப்படி நடைபெறும் தெரியுமா? புராதன ரிஷிகளின் குரு குலங்களைப்போல நடத்தப்படுமாம்—மக்கள் தாழ்ந்த நிலையிலிருப்பதால் இப்புதிய முறையாம்! அதற்காகவே பம்பாய் அரசு இப்புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறதாம்! மக்கள் முன்னேற குருகுலம் தேவையாம்! கூறு கிருர்கள் பம்பாய் பகுத்தறிவாளர்கள்!

மக்கள் முன்னேற குரு குலங்கள் தேவைதானு? சாதுக்களால் அலக்கழிக்கப் பட்ட சித்திப் பெண்களின் எண்ணிக்கை வளர வேண்டு மென்பதுதான் அரசியலாரின் ஆசையா? காவியுடையோரும், கமண்டலமும், கருப்புத்திரைக்கு அப்பால் கட்டாரியும் வைத்திருக்கும் கள்வர் குகையும் நாடெங்கும் இருக்கத்தான் வேண்டுமா? கொலுவிருப்போரே கூறுங்கள்! ஃ

## கேள்வி – பதில்!

★

“சித்தூர் பிரச்சினை எங்களுக்கே உரியது. நாங்கள்தான் அதைப்பற்றி முதலில் பேசினேம். நான் மூட்டிய நெருப்பில் தி. மு. கழகம் குளிர் காய்கிறது”

நொந்துபோனவர் கழகத் தலைவர்.

“அய்யாவே! உமக்கு ஒன்று கூறுகிறேம்—நீர் போட்டிருக்கிற கொடியைக் கூட இந்தி எதிர்ப்பின் போது நாங்கள் தான் முதன் முதல் கையாண்டோம்”

தி. மு. க. தோழன்

“கொடி தனிப்பட்ட யாருக்கும் சொந்தமல்ல—அது தமிழகத்தைச் சேர்ந்தது!”

நோ. க. தலைவர்.

“சித்தூர் பகுதிப் பிரச்சினையும் அப்படித்தான் தனிப்பட்ட யாருக்கும் சொந்தமல்ல; அது தமிழகத்தைப் பொருத்தது.”

தி. மு. க. தோழன்

## கருத்துக் குருடர்களுக்கு

பாட்டுக் கச்சேரி முடியும்போது மங்களம் பாடுவதைப் போல், எந்தக் கட்சியினர் கூட்டம் போட்டுப் பேசினுலும்-அவர்கள் தமிழரசுக் கழகமானுலும், கம்யூனிஸ்டுகளாயினும் — கடைசியாக சரியாகவோ, தவருகவோ, தி. மு. கழகத்தைப் பற்றிப் பேசித்தான் கூட்டத்தை முடிக்கிருர்கள் — பேசினல்தான் கூட்டம் பூர்த்தியாகும் என்னும் நிலை வளர்ந்து விட்டிருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் நம்மை-நாட்டவரின் உள்ளங்களில் நிலையான இடத்தை நிரந்தரமாகப் பிடித்துவிட்டிருக்கிற நமது கொள்கைகளை — மறைத்துவிட எண்ணுபவர்கள், அரசியல் கருத்துக் குருடர்கள்தான்!

—அண்ணு

## தொடரும் தோல்விக் காதை!

★

பெரும்பகுதி மக்கள் ஒரு முகம் நோக்கி ஆதரிப்பதை தனித்து நின்று எதிர்த்தும், “கூடாது, தகாது” என்று ஜெகமதிர எதிர்ப்புக் குரல் எழுப்பும் படியான தீச் செயலை இரு கையேந்தி வரவேற்றும் அதனல் பெரிய மனிதராகிவிடலாம் என்ற நைப்பாசை இந்தியத் துணைக் கண்டத்து அரசியலில் ஒரு சில பெரியவர்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கிறது. தோல்வியையே தன் அரசியல் வாழ்வில் தொடர்கதையாக்கி வரும் அம்பேத்கார் அந்தப் பெரியவர்களின் பட்டியலில் புதிய உறுப்பினராகச் சேர்ந்திருப்பது விந்தைக் குரியதல்ல; வட நாடு தென்னுடு வேற்றுமை வளர்ந்தால் நூற்றுக்குத் தொண்ணூருக டில்லிசர்க்கார்காரியாலத்தில்பணியாற்றிவரும்தென்னிந்தியர்களின் கதி என்னுவது என்று சென்ற வாரம் கோவையில் பேசியிருக்கிருர். காந்தியாரை எதிர்த்தார்; ஹரிஜன் பத்திரிகைக்கு கண்டனக் கணைகள் தொடுத்தார்—ஆன பலன் எதுவும் அவர் அடைந்தாரில்லை—சட்ட அமைச்சாரனுர். கிருஷ்ணமாச்சாரியும் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும்கோபாலசாமி அய்யங்காரும் அம்பேத்காரின்குரலை கிணற்றுக்குரலாக்கிவிட்டார்கள். புழுங்கினர்-புணுகுப் பூனையாக உலா வந்தார்—விட்டேனு பார் என்று அசோக் மேதாவோடு மோதினர்—முடிவு தோல்வியாயிற்று! பாவம் — இப்போது உதைக்கும் காலை முத்தமிடத் துவங்கியுள்ளார்.

“வடநாடு தென்னுடு வேற்றுமை வளர்ந்தால் டில்லி வாழ் தென்னிந்திய குமாஸ்தாக்கள் கதி என்னுவது?” என்கிருர். நூற்றுக்குத் 90 பேர் தென்னிந்தியக் குமாஸ்தாக்கள்என்பதைச் சொல்கிருரே ஒழிய, அந்தத் தொண்ணூறு பேரால் தான் இந்திய அரசாங்கத்தின் நிர்வாகப் பற்சக்கரமே உருளுகிறது என்பதை அவர் அறியார் போலும்! இதனல்,இந்திய அரசாங்கம்நடைபெறுவதே தென்னுட்டு மூளையால்தான் என்பதை வெளிப்படுத்திவிட்டமாபழிக்கும்ஆளாகிவிட்டார், தோல்வியின் காதலன் அம்பேத்கார்! அந்தோ பரிதாபம்!

## ★ வலங்கை முதல் குமரி... ★

2–ம் பக்க தொடர்ச்சி

கள். நாஞ்சில்தந்த வைரங்களாம் தோழர் மனோகரன்—தோழர் ஜான் இருவரும் நாஞ்சில் நிலைமைகளைப் பற்றி சிறிது நேரம் எம்முடன் அளவளாவினர். பின்னர் கூட்டம் நடைபெறும்இடத்திற்கு சென்றோம். மிக மிகப் பெருங் கூட்டம். வீட்டுக் கூறைகளில் எல்லாம் மக்கள்! ஒருவர் தோளில் ஒருவர்! போக்குவரத்துக்கள் எல்லாம் தடைப்பட்டு, அதற்கு புதிய வழிகண்டு பிடிக்கப்பட்டது; அத்துணை பெரிய கூட்டம். தோழர் மனோகரன் அவர்கள் தலைமையிலே நானும், மதுரை முத்துவும் பேசினோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் புனிதமான கொள்கைகள், நாஞ்சில் மக்களின் மனத்திலே எந்த அளவுக்குப் பதிந்துவிட்டிருக்கிறது என்பதற்கு அந்தக் கூட்டமே ஆதாரமாக அமைந்தது என்று கூறலாம். மறுநாள் மாலை 5-மணிக்கு இரணியல் என்னும் ஊரில் கூட்டம். சிறப்பான ஊர்வலம். செழிப்பான முகத்துடன் இரணியல் எங்களை வரவேற்றது. தோழர்கள் முத்து–ஜான் மனோகரன்ஆகியோர் பேசினோம்.

மாலை ஐந்து மணிக்கு அவ்வளவு பெரிய கூட்டம். ஏறத்தாழ பத்தாயிரம் பேர் கூடியிருந்த காட்சி தி. மு. க. வின் வளர்ச்சிக்கு ஒரு சாட்சி என்று இரணியல் மக்கள் பேசிக் கொண்டனர். அந்த கூட்டத்தை முடித்துவிட்டு, உடனே குளச்சல் என்னும் ஊருக்கு சரியாக எட்டு மணிக்குப் போனோம். தோழர் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலே, தோழர்கள் மனோகரன், ஜான், முத்து, பராங்குசம் ஆகியோரும் நானும் பேசினோம். பதினைந்தாயிரத்துக்கு மேல் மக்கள் கூடியிருந்தனர்-அந்த நிகழ்ச்சி முடிந்து, இரவு 12—மணிக்கு, தோவாளையில் தோழர்கள் நடித்த 'ஓரே முத்தம்' என்ற நாடகத்திற்கு வந்தோம். அங்கே சிறிது நேரம் பேசிவிட்டு புறப்பட்டோம்—இரவோடு இரவாக நானூறு மைலைக் கடந்து மறுநாள் காலையில் உடையார் பாளையம் திருமணத்துக்கு வரவேண்டுமே! ஆகவே நாஞ்சில் தோழர்களிடம் விடைபெற்றுக் கொண்டோம். பிரிய முடியாத நிலையில் தழுவிக் கொண்டே நா தழு தழுக்க "போய்வருகிறோம்" என்றுகூறினோம். நாஞ்சில்பகுதிதமிழன்னையின் மடியில்தவழ்ந்து விளையாட துடிக்கும் பகுதி-அங்கேநாங்கள் ஆம்; தி. மு. கழகத்தின் தொண்டர்கள் சென்றது அவர்களுக்கு அவ்வளவு எழுச்சியைத் தந்திருக்கிறது. நாஞ்சில் கழகம் துவங்கிய நேரத்திலேயே — பெரியதோர் மாநாட்டைத் திறம்பட நடத்திக் காட்டியவர்கள் அந்தத் தோழர்கள். அத்தகைய மாவீரர்கள் உலவும் மண்ணில் நாமும் நமது தொண்டைச் செய்கிறோம் என எண்ணும்போது இதயப் பூரிப்பு ஏற்படத்தானே செய்கிறது! குமரிமுனையிலே நமது கொடி பறக்கிறது — வலங்கைமான் என்ற தஞ்சை மாவட்டத்து சிற்றூரிலிருந்து—வளம் சிந்தும் குமரிமுனை வரையில் கழகத்தின் வளர்ச்சியிலே ஒரு நல்ல கண்ணோட்டம் போட்டுவிட்டு உடையார் பாளையம் வந்தோம், மறுநாள் காலையிலே!—அங்கே வேலாயுதத்தின் குமரிக்கு திருமணம். அறிஞர் அண்ணா பேசிக்கொண்டிருந்தார் — நாங்களும் வந்து சேர்ந்தோம். தி. மு. கழகத்தின் முக்கியஸ்தர்களில் சிலரும் அண்ணாவும் நன்கொடையாகத் தந்த ஆயிரம்ரூபாயை—அண்ணா அவர்கள் வேலாயுதம் குமரி மங்கையர்க்கரசியிடம் பரிசாகத் தந்தார்.

"அநேகமாக எல்லாக் கட்சிகளும் தியாகிகளின் பிணங்களை வைத்துக்கொண்டு கட்சியை வளர்த்துக் கொள்ளும். தி. மு. கழகம் ஒன்றுதான்—தியாகிகளுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன என்ற குடும்ப பாசத்துடன் அந்தக் குடும்பங்களை கவனித்து வருகிறது. மாயவரம் மாநாட்டிலே, தாளமுத்து வின் துணைவியாரிடம் ஐநூறு ரூபாய்க்கு மேல்அன்பளிப்பு தந்தது! நெல்லிக்குப்பம் மஜீது குடும்பத்துக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு கரும்புத் தோட்டம் வாங்கித் தந்தது!—இதோ வேலாயுதம் குமரி திருமணத்துக்கு ஆயிர ரூபாய் பரிசு வழங்கியிருக்கிறது — இன்னும் இது போன்ற பல முயற்சிகளில் ஈடு பட்டும் இருக்கிறது." என்று உடையார்பாளையத்து மக்கள் பேசிக் கொண்டார்கள். திருமணம் முடிந்து நாங்கள் எல்லோரும் சென்னைக்குப்புறப்பட்டோம். இவ்விதமாக—வலங்கையில் துவங்கிய சுற்றுப் பயணம், வேலாயுதம் குமரியின் திருமண நிகழ்ச்சியுடன் முடிவுற்றது—என் ஆறு மாத ஓய்வும் ஆரம்பமாகிவிட்டது; ஜூன்14-ந்தேதிமுதல்!—

வணக்கம்—வரட்டும் டிசம்பர்!

விரைவில்! மிக விரைவில்!


★

### வறுமையில்......

வறுமையிலே கணக்குப் பார்ப்பவன் சிக்கன முடையவன்!

வளமையில் கணக்குப் பார்ப்பவன் கருமி.

வளமையில் அளவுக்கு மீறி செலவழித்து விட்டு வறுமை யேற்பட்டபின் கணக்குப் பார்ப்பவன் முட்டாள்!




"பெயர் மாற்றும் போராட்டம் சோறு போடுமா?"!

"டால்மியாபுரம் கல்லக்குடியாகிவிட்டால் வேலையற்றோருக்கு வேலை கிடைத்துவிடுமா?"

— இப்படிப்பட்ட அசட்டுக் கேள்விஅம்புகளெல்லாம் நம் மீது ஏவப்பட்டன; இது அரசியல் அநாகரீகம் என்று தெரிந்தும் கூட இன்றும் நம்மீது காய்பவர்கள்—முன்னே விட்டு பின்னால் முணகுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். கொதிக்கும் வெய்யிலுக்கும்ஆண்டையின்கனல் மொழிக்கும்—அஞ்சாது நாளெல்லாம் உழைக்கும் ஏழைப் பாட்டாளி ஒரு நாலணா வெள்ளிப் பணத்துடன் கழனியைவிட்டு வெளியேறுகிறான். அந்த வெள்ளிக் காசைப் பார்த்தவுடன் அவன் உள்ளமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் தோய்கிறது. அந்தநேரத்தில் அவன் தோளைப்பிடித்து நிறுத்தி, "ஆம், உதவாக்கரையே! இந்த நாலணா நாணயம் ஒரு சாதாரண உலோகத்துண்டு—இது உனக்கு சோறு போடுமா?" என்று யாராவது கேட்டால் அவன் சட்டென்று பதிலளிப்பான்! "இந்த நாலணாவைக் கொண்டு ஒருபடி அரிசிவாங்குவேன்; அந்த ஒருபடி அரிசியை ஒருபானை சோறாக்குவேன்; அந்த சோற்றை உண்டு என் பசிதுடைப்பேன்" என்று!

இதே பதிலைத்தான்; நம் பிரச்சினையை உணர்ந்துகொண்டும்—கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியும் 'மாவீரர்' களுக்கு சொல்ல விரும்புகிறோம்; தி. மு. க. வின் ஒவ்வொரு போராட்டமும் வெற்றி பெறும்போதும் நாம் திராவிட நாட்டை அடையும் படிகளில் பலவற்றைக் கடந்து விட்டதாக உணர்கிறோம். நாலணா உலோகத் துண்டு எப்படி ஒரு பாட்டாளியின் பசியைப் போக்குகிறதோ அந்த அளவில்தான் நம்முடைய போராட்டங்களும் பஞ்சத்தையும் பசியையும் ஒழிக்கிறது. அந்த ஏழையின் மொழிப்படி சொல்லப் போனால் அறப் போராட்டங்களின் உதவியால் சுதந்திர திராவிடக் குடியரசைப் பெறுவோம்; அப்போது ஒழியும்; பசியும், பட்டினியும்!" இதைத்தான் கூறை வீட்டிலிருந்து கொண்டே தீப்பந்தம் சுழற்றும் தோழர்களுக்கு சொல்ல விரும்புகிறோம்; அரசியல் தெளிவு பெறுவார்கள் என்ற பெரு நோக்கோடு!


### முரசொலி

ஆகஸ்டு 6 ந் தேதி முதல், 12 பக்கங்களுடன் புதிய தொடர்கதையைத் தாங்கி வெளிவரும். கூடுதலான பிரதி வேண்டுவோர் முன் பணத்துடன் விண்ணப்பிக்கவும்.

முரசொலி ★ சென்னை-14.


Filmed as bound


இன்று முதல்
சென்னை
காஸினோ
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தமிழ் நாடெங்கும்
பக்ஷிராஜாவின்
மலைக்கள்ளன்
கதை: நாமக்கல் கவிஞர் வசனம்: மு. கருணாநிதி
டைரக்ஷன்: S.M. ஸ்ரீராமுலு நாயுடு
தினசரி 3 காட்சிகள்
2.30 6 9.30 மணிக்கு
ரிஸர்வேஷன் இப்பொழுது நடைபெறுகிறது
BHARAT STUDIO
DISTRIBUTORS
FOR TAMILNAD INCLUDING CITY & MALABAR
CHAMRIA TALKIE DISTRIBUTORS
FOR MYSORE STATE
VIJAYA TALKIE DISTRIBUTORS

# கடைசிப்பக்கம்

## துணிகர நடிகர்!

பாக்ஸ் என்பவர் மேல் நாட்டின் பிரபலமான நாடக நடிகர். அவர் ஒரு நாடகத்தில் பிசாசு வேஷம்போட வேண்டியிருந்தது. அந்த வேஷம் கோர சொரூபமாக இருக்க வேண்டுமென்பதற்காக தலை சிறந்த மேக்அப்மேன் ஒருவரை அவர் ஏற்பாடு செய்திருந்தார். மேக்அப்மேன் தன் கைத்திறனையெல்லாம் காட்டி பாக்சை ஒரு பயங்கர சொருபியாக மாற்றி விட்டார். நாடகம் துவங்க அரை மணி நேரம் இருக்கும்; பாக்ஸ் பிசாசு வேஷம் எப்படி அமைந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள நிலைக் கண்ணாடியின் முன்னால் போய் நின்றார். அவ்வளவுதான்! நிலைக் கண்ணாடியில் அகோரவடிவம் ஒன்று நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். பாக்சால் தன் கண்களை நம்ப முடியவில்லை. மயக்கம் போட்டு கீழே விழுந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவரது இருதயம் நின்றுவிட்டது.

வே. தமிழ்மணி. பூங்குடி

(?) எழுத்துக்களுக்கு "அ" முதன்மையாக இருப்பது போல ஆதிபகவன் இவ்வுலகிற்கு முதன்மையானது என்பது எப்படி தவருக இருக்க முடியும் ?

எழுத்துக்கு "அ" முதன்மை என்ருல் அந்த "அ" வுக்கு எது முதன்மை? அதை எழுதுகிற விரலா? அல்லது அந்த எழுத்து எழுதப்படுகிற தாளா? — பல எழுத்துக்களில் "அ" முதன்மை அதுபோல பல கடவுள்களில் ஆதிபகவன் முதன்மையா? அப்படியானல் கடவுள் ஒன்ரு? பலவா? இப்படியெல்லாம் சிந்தனை நிறைந்த கேள்விகள் நம் இதயத்தில் எழும்புமானல், திருக்குறளின் முதல் குறளுக்கு சரியான பொருள் தெளிவாகக் கிடைக்கும்.

சின்னச்சாமி. ஷ—நாய்நகர்.

(?) ஏ! சினிமா கட்சிக்காரர்களே! "அறிஞர்"களே! கவர்னரின் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்கிற கிளர்ச்சி இப்போது அவசியம் தானு ?

பெயருக்கேற்ற கேள்வியைக் கேட்கிறீர்! கவர்னர் சம்பளம், அலவன்ஸ் முதலியவைகள் ஆண்டு ஒன்றுக்கு பத்துலட்சம் வாரியிறைக்கபபடுகிறதே—அதை பாதியாக ஆக்கவேண்டியது இப்போது உம்மைப் பொருத்தவரையில் அவசியம் இல்லை தான்! உமது வேலைகளை ஒத்திவைத்துவிட்டு குடியாத்தம் ஓடுமய்யா, நண்பரே!

இளமைபித்தன்-உதகமண்டலம்.

(?) கடவுளே இல்லை என்பது தான் திராவிடக் கட்சியின் கொள்கையா ?

கொள்கை அதுவல்ல தோழரே!

வி. கே. வரதராசன்—நாமக்கல்

(?) குடியாத்தம் தொகுதியில் காங்கிரஸ் ஜெயிக்குமா? கம்யூனிஸ்டு ஜெயிக்குமா?

ஆரூடம் கேட்கிறீரா அன்பரே! இரண்டில் ஒன்று ஜெயிக்கும். எது ஜெயித்தாலும் "திராவிட நாட்டுப்பிரிவினை தேவையில்லை" என்கிற ஒரு கட்சி தான் தற்காலிகமாக ஜெயித்தது என்று அர்த்தம்.

லிங்கையா — தாடிக்கொம்பு.

(?) கடவுள் மனிதனைப் படைத்தாரா? மனிதன் கடவுளைப் படைத்தானு?

"தன்னைப் படைப்பதற்காகவே கடவுள் மனிதனைப் படைத்தார்" என்று ஒரு பக்தர் சொல்கிருர்! அதை உமக்கு நினைவூட்டுகிறேன்.

மு. கருப்பையா —சேதுநாராயணபுரம்.

(?) கதைவசனம் எழுதுவது காசுக்காகவா? கொள்கைக்காகவா ?

காசு இருந்தால்தான் மனிதன் வாழ முடிகிறது. அதற்காக கொள்கையை மறந்து கருங்காலிகளாக மாறுபவரும் உண்டு. கொள்கையை எங்கும் சொல்வேன் என்ற துணிவுடன் கிளம்பியவரை கலைஉலகம் கைகூப்பி வரவேற்கும் சகாப்தமிது!

சென்னைவாசி—

(?) திருத்தணிப் பிள்ளையார் ஒரு கூட்டத்தில் பேசும்போது நான் நினைத்தால் பொதட்டூர் பேட்டை தி. மு. க. மகாநாட்டை நிறுத்தியிருப்பேன். என்று கூறினரே, அது பற்றி உங்கள் கருத்தென்ன ?

பூனை, தான் கண்ணை மூடினல் உலகம் இருண்டுவிடும் என்று கூறியதாம்! சூரியன் மேற்கே ஓடியதற்குகாரணம் தன்னுடைய குரைப்புத்தான் என்று குக்கல் கூறிக்கொண்டதாம். கீழே விழுந்த கோழை, மீசையில் மண் ஒட்டவில்லை என்ருனும்; மீசை இல்லாத காரணத்தால்! அதுபோலத்தான் இதுவும்!—

ராஜமாணிக்கோனர்—மதுரை.

(?) பூம்புகார் — பழையமாதிரி புராணமாகவே இருக்குமா? உண்மையான சிலப்பதிகாரமாக இருக்குமா ?

சிலப்பதிகாரம் — புதிய குரலெடுத்து முழங்கும். கவலைப்படாதீர்கள். சிலம்புச் செல்வம், மக்கள் மன்றத்திலே எப்படி நடமாட வேண்டுமோ; அப்படி நடமாடும்.

கமலா.—அண்ணமலைநகர்.

(?) தமிழைப் பாடமாக எடுத்துள்ள என்னைப் பார்த்து சிலர், போயும் போயும் தமிழையா எடுத்தாய்—என்று தமிழை இழிவாகப் பேசுகிருர்களே — காரணம் என்ன ?

தமிழர்கள் தமிழை இழிவாகப் பேசமாட்டார்களே சகோதரி!

மா. பாலசுப்ரமணியம். தல்லாகுளம், மதுரை.

(?) கோயிலில் முடங்கிக் கிடக்கும் சொத்துக்களைப் பற்றி கம்யூனிஸ்டுகள் பேசாதது ஏன் ?

கடவுள் கூலி கொடுக்க மாட்டார் என்று தான்! (அதாவது, கடவுள் சொத்துக்களைப் பற்றிப் பேசினல், அவர் தண்டனை தருவார் — பேசாமலிருந்தால் தண்டனையிலிருந்து தப்பிவிடலாம் என்ற பொருள் இதற்கு!

## வருமுன் . . .

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

பட்ச அளவுக்குமேல் யாரும் நிலம் வைத்திருக்கக்கூடாது என்று நாளை தேசியத்தார்கள் கொண்டு வரப்போகும் சட்டத்தை உடைத்தெறிந்து ஏமாற்று பூமிக்குதப்பி ஓடும் சாலையையும் ஏனைய நிலப்பிரபுக்களுக்கு காட்டி விட்டார்.

தியாகராசரின் கரும்பாலை சென்னை உணவு நிலையைஉடை தெறியும் வேம்பாலை. அந்த வேம்புக்கு வரவேற்பளிக்கும் காமராசர் ஆட்சியையும்—டில்லி பீடத்தையும் மக்கள் சக்தி எதிர்க்கத் தவருது.

எனவே அதிர்வேட்டு கிளம்பு முன்பே சூதுத்திட்டம் என்னும் சுற்று மத்தளம் முழங்க-நல்லவர்களைப் போல மக்கள் மன்றத்திலே சதிராடும் சுகபோகிகளும் சுரண்டல்காரர்களும் சரிப்பட்டு வரவேண்டுகிருேம்.


### முகவரி மாற்றம்

எஸ். எஸ். ராஜேந்திரன்
11, வெங்கடரத்தினம் ரோட்
தேனும்பேட்டை
சென்னை-18.

கே. எம். பி. கனராஜ்—கோட்டை கல்

(?) எழுத்தாணியாரே! உங்களுக்கு யாரிடம் அதிக பயம்?

மடித்துப் போன ஓலையிடம் அதாவது பொறுமையாக வெடித்துப் போன உள்ளத்திடம்!

புதிய தொடர் கதை
[illegible]
ஆரம்பமாகிறது


மு. கருணநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை-14.